[*2024 பிப்ரவரி 22*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நிச்சயமாக நான் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நிச்சயமாக நான் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்த பிறகு பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். நான் சொல்கிறேன். அனைவரும் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நான் நடவடிக்கைக் குறிப்பைக் கேட்டிருக்கிறேன். அவைக் குறிப்பில் நீக்க வேண்டியிருந்தால் நான் நீக்கிவிடுகிறேன். கேள்வி நேரம் முடிந்தவுடன் நான் அதைப் பார்க்கிறேன். நான் கேட்டுவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள். . . (குறுக்கீடுகள்) தம்பி உதயகுமார், நான் சொல்வதைக் கேளுங்கள் என்று சொல்கிறேன். வினாக்கள்–விடைகள் நேரம் முடியட்டும், நான் நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்து தவறான வார்த்தை இருக்குமானால் அதனை நீக்கிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் தருகிறேன் என்று சொன்ன பிறகும் ஏன் கேட்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

47—

பேருந்து வசதி

***52699—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2024 பிப்ரவரி 22]

கிருஷ்ணகிரி மாவட்டம், திம்மாபுரம் ஊராட்சி, சுப்பிரமணியபுரத்திலிருந்து காவேரிப்பட்டினத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்தவுடன் நான் நடவடிக்கை குறிப்பினைப் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், திம்மாபுரம் ஊராட்சி, சுப்பிரமணியபுரத்திலிருந்து காவேரிப்பட்டினம் செல்ல பேருந்து இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி பதில் நேரம் முடிந்தவுடன் நான் உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி பதில் நேரம் முடிந்தவுடன் நான் உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதைத்தான் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா! மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். நேற்று அந்தக் கிராமத்து மக்கள் என்னிடத்தில் அளித்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் இந்த வினாவினை இந்த அவையின் முன்வைத்திருக்கிறேன்.*

எனவே, அதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், கொண்டப்பள்ளி ஊராட்சி, தானம்பட்டி கிராம மக்கள் பேருந்து நிலையத்திற்குச் செல்ல வேண்டுமானால் 2 கி.மீ. தொலைவிலுள்ள கெங்கவல்லி அல்லது 3 கி.மீ. தொலைவிலுள்ள கொண்டப்பள்ளிக்குச் செல்ல வேண்டும். ஏற்கெனவே 13 B மற்றும் 19 ஆகிய எண் கொண்ட பேருந்துகள் தானம்பட்டி கிராமத்திற்கு இயக்கப்பட்டு வந்தன. அவ்வாறு இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டு, பல வருடங்கள் ஆகின்றன. எனவே, மீண்டும் தானம்பட்டி கிராமத்திற்குப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற சுப்பிரமணியபுரம் கிராமம், காவேரிப்பட்டினம்-கிருஷ்ணகிரி சாலையில், காவேரிப்பட்டினம் பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. காவேரிப்பட்டினத்திலிருந்து கிருஷ்ணகிரி செல்கின்ற பேருந்துகள் சுப்பிரமணியபுரம் பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன. கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து காவேரிப்பட்டினத்திற்கு சுப்பிரமணியபுரம் வழியாக கடந்த 1½ வருடங்களுக்கு முன்பு வரை இயக்கப்பட்டிருந்தன. அப்போது கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் செல்லும் வாகனங்கள் நெடுஞ்சாலையைக் கடக்க முற்படும்போது, நெடுஞ்சாலையில் வேகமாக வரும் வாகனங்களால் அதிக அளவில் விபத்துகளும், உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இதன்காரணமாக, காவேரிப்பட்டினம் புறவழிச்சாலையிலிருந்து காவேரிப்பட்டினம் ஊருக்குள் வரும் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், NHAI மூலம் நிரந்தரமாக தடுப்பான்கள் வைத்து அடைக்கப்பட்டது. மேலும், கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் வழியாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் அணுகு சாலையில் சென்று

2024 பிப்ரவரி 22]

பழத்தோட்டப் பிரிவு சாலை வழியாக காவேரிப்பட்டினம் பேருந்து நிலையத்திற்குச் செல்லுமாறு நெடுஞ்சாலைத் துறைமூலம் வழித்தடம் மாற்றியமைக்கப்பட்டது. மேலும், சுப்பிரமணியபுரம் கிராமம், பழத்தோட்டப் பிரிவு பேருந்து நிறுத்தத்திலிருந்து 0.900 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரசு விதிகளின்படி, ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரம் வரையிலான கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது. எனவே, சுப்பிரமணியபுரம் கிராமத்திற்கு தற்போது பேருந்து வசதி செய்வதற்கு வழியில்லை.

மேலும், கடந்த காலத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். கடந்த காலத்தில் எப்போது நிறுத்தப்பட்டதென்று கேட்டால், கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டதாக அவர்கள் சொல்வார்கள். கொரோனா காலத்தில் ஏன் அப்பேருந்துகள் நிறுத்தப்பட்டன என்பதற்கான காரணத்தையும் அவரே அறிவார். அந்த நேரத்தில் நடத்துனர்கள் மற்றும் ஓட்டுனர்களைப் போதுமான அளவில் அவர்களுடைய ஆட்சியில் நியமிக்காத காரணத்தினால், ஓட்டுனர் மற்றும் நடத்துனர்கள் இல்லாமல் பல பேருந்துகள் நிறுத்தப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே, அந்தக் குறிப்பிட்ட வழித்தடத்தை இயக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்துபூர்வமாக மனு அளித்தால் அவற்றை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சியில் இயங்கிவரும் நகரக் கிளையில் உணவு அறை மற்றும் நடத்துனர், ஓட்டுனர் தங்கும் ஓய்வு அறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கு மேலாகின்றது. அந்த ஓய்வறைகளும், உணவு அறையும் பழுதடைந்துள்ளன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் பழுதடைந்துள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டித் தருவதற்கு, மதிப்பீடு தயார் செய்வதற்கு, பலமுறை துறை அதிகாரிகளிடம் கேட்டும் தரப்படாமல் உள்ளது. எனவே, திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்கும், பழுதடைந்த உணவகம்

மற்றும் தொழிலாளர் ஓய்வறை ஆகியவற்றைக் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலை மற்றும் போக்குவரத்துத் துறையின் நிதிநிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, பல்வேறு இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக வசதிகளைச் செய்து தருகிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த நிதிக்கு உரிய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து, ஒரு கடிதம் அளித்தால் நானே விரைவாகப் பெற்றுத் தந்து, விரைவாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, பல விவசாயக் கிராமங்களைக் கொண்டதாகும். இங்கு கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகளில் ஒன்றான 14A வழித்தடப் பேருந்தும், பேராவூரணியிலிருந்து கள்ளங்காடு, முருமக்காடு, குருவிக்கரம்பை வழியாக பட்டுக்கோட்டை செல்லும் பேருந்தும், பட்டுக்கோட்டையிலிருந்து திருச்சிற்றம்பலம், செருவாவிடுதி, கறம்பக்குடி செல்லும் பேருந்தும், மீண்டும் இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே குறிப்பிட்டிருந்தேன். கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள், கொரோனாவால் நிறுத்தப்படவில்லை. அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில், பேருந்துகளுக்குப் போதிய ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இல்லாமல் பல வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டன. தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெற்று, நேர்காணலும் முடிந்திருக்கிறது. விரைவிலே ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பணியமர்த்தப்பட இருக்கிறார்கள். அடுத்ததாக, மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களைத் தேர்வு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். எனவே, தேர்தலுக்குப் பிறகு, அது தொடர்பான நடவடிக்கைகள் முடிந்து புதிய ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பேருந்துகள் இயக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான். (குறுக்கீடு) உங்களுக்கு அடுத்த கேள்விக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் zero hour-ல் அதுகுறித்துப் பேசுங்கள். (குறுக்கீடு) அதிலே என்ன குறை இருக்கிறது? இல்லாததை இல்லை என்றுதான் குறிப்பிட்டார். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அதில் ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. Driver இல்லாததால் bus நிறுத்தப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அதில் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது? (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் பேசவில்லை என்றால், நான் அடுத்த கேள்விக்குப் போய்விடுவேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதி, ஆரணி நகரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்திலுள்ள ராணிப்பேட்டை மாவட்டம், பூட்டுத்தாக்குப் பகுதியில் புதியதாக*

அமைந்துள்ள வேலூர் CMC மருத்துவமனை விரிவாக்கம் பகுதி 2-க்கு ஆரணி மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு தினந்தோறும் செல்கிறார்கள். எனவே, ஆரணி முதல் பூட்டுத்தாக்கு வரை ஒரு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மேலும், இவ்வழித்தடம் அமைந்தால் இடைப்பட்ட பகுதிகளில் உள்ள இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலுக்கு பக்தர்கள் செல்லவும் வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள், திருவண்ணாமலை மற்றும் ஆரணி பகுதியிலிருந்து CMC மருத்துவமனைக்கு பேருந்துகள் இயக்க வேண்டும் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். தற்போதுதான், புதிய பேருந்துகள் வாங்கப்படவிருக்கின்றன. பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கப்படும்பொழுதும், அடுத்தகட்டமாக ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அந்தப் பேருந்துகளை இயக்கி வைப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

குடமுழுக்கு

***21589—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—